# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 15.10.2022

## தலைமைக் கழக செய்தி வெளியீடு

'மக்களின் குடியரசுத்தலைவராக' திகழ்ந்து, அனைத்துத் தரப்பினரின் அன்பையும் பெற்ற **டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம்** அவர்களின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி **கழக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் அவர்களின் சார்பில் இராமேஸ்வரம் பேய் கரும்பு கிராமத்தில் அமைந்துள்ள நினைவு மண்டபத்தில்** கழக தேர்தல் பிரிவு செயலாளரும், மதுரை புறநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.இ.மகேந்திரன்,** கழக அமைப்புச்செயலாளரும், இராமநாதபுரம் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் வாரியத் தலைவருமான **மண்டபம் திரு.G.முனியசாமி**, கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினரும், கழக இதயதெய்வம் அம்மா பேரவை செயலாளருமான **திரு.K.டேவிட் அண்ணாதுரை,** கழக சிறுபான்மையினர் நலப்பிரிவு செயலாளர் **துருக்கி திரு.M.A.C.ரபீக் ராஜா,** இராமநாதபுரம் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.M.முருகன்,** சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் **தேர்போகி திரு.V.பாண்டி,** கழக வழக்கறிஞர் பிரிவு துணைச்செயலாளரும், கழக செய்தி தொடர்பாளருமான **திரு.குரு.முருகானந்தம்** ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.



**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**